සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය I, II
குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I, II
Citizenship Education & Governance I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

சுட்டெண் :..............................

## குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I

※ இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டுள்ளது.
※ ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறுவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

● **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை/சொற்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**1.** நேரடி சனநாயக உபாயமான 'ஆரம்பித்தல்' நடைமுறையிலுள்ள நாடாக .................................... கருதப்படுகிறது.
(பிரித்தானியா/பிரான்ஸ்/சுவிட்சர்லாந்து)

**2.** .................................... இருகட்சி முறை நிலவும் நாடாகும்.
(இந்தியா/பிரித்தானியா/சீனா)

**3.** சமூகத்தில் வாழும் ஏனைய உயிர்களுக்குத் தீங்கு நேராதவாறு தமது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நபரொருவருக்கு வெளிச்சூழலிருந்து கிடைக்கும் ஆதரவு .................................... எனப்படும்.
(சுதந்திரம்/சமத்துவம்/உரிமைகள்)

**4.** வரையறுக்கப்பட்டதொரு நிலப்பரப்பில் ஏனைய சமூக அமைப்புகளையும் கடந்து மீயுயர் அதிகாரத்தைக் கொண்டுள்ள மனிதக் குழு .................................... எனப்படும்.
(அரசு/அரசாங்கம்/கோத்திரம்)

**5.** தேசிய அரசுகள் ஆரம்பத்தில் ............................................ உருவானதாகக் கருதப்படுகிறது.
(கிரேக்க நகர அரசுகளில்/நிலமானிய முறை அரசுகளில்/கோத்திர அரசுகளில்)

**6.** ஐக்கிய அமெரிக்க குடியரசின் சட்ட மன்றமானது .................................... என அழைக்கப்படுகிறது.
(பாராளுமன்றம்/காங்கிரஸ்/தேசிய சபை)

**7.** பிரித்தானியராட்சியின் போது இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் எடுக்கப்பட்ட முதற்கட்ட நடவடிக்கை .................... .................................... கருதப்படுகிறது.
(மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்/கம்சபா (கிராமசபைகள்) கட்டளைச் சட்டம்/நிறைவேற்றுக்குழு)

**8.** 13 வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கிணங்க நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பான அனைத்து பணிகளும் உரித்தாவது ......................................... பட்டியலுக்காகும்.
(மாகாண சபை/மத்திய அரசாங்க/ஒருமைப்பாட்டு)

**9.** மாகாண சபையொன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக விளங்குபவர் ............................................ ஆவார்.
(மாகாண ஆளுநர்/மாகாண செயலாளர்/முதலமைச்சர்)

**10.** கி.பி. 105 இல் சீனாவில் ஆரம்பமான கடதாசி உற்பத்தியானது உலகின் ஏனைய நாடுகளுக்கும் துரிதமாகப் பரவியது. இதனை .................................. ஊடுருவலுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.
(நேரடி/இடைத்தொடர்பு/புதுப்பித்தல்)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

- **11** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் எதிரிலுள்ள அடைப்புக்குறியினுள் குறிப்பிடுக.

**11.** இஸ்ரேல் எழுதப்பட்டதோர் அரசியலமைப்பைக் கொண்டிராத நாடாகும். (.........)

**12.** சட்டத்திற்குட்பட்டு நடத்தலும் சட்டத்தைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதலும் ஒழுக்கம் சார்ந்த கடமைகளில் உள்ளடங்கும். (.........)

**13.** பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் இடைநிலைப் பொருட்கள் ஒரு தடவை மாத்திரமே பயன்படுத்தக்கூடியவையாக இருப்பது அவற்றின் சிறப்பியல்பாகும். (.........)

**14.** சமவுடைமைப் பொருளாதார முறை நிலவுகின்ற நாடுகளில் உற்பத்தி வளங்கள் மீதான உரிமை அரசுக்குரியதாகும். (.........)

**15.** மறையான வெளிவாரிக் காரணிகள் மீது கவனம் செலுத்தாமை சந்தைப் பொருளாதாரத்தின் விரும்பத்தக்க இயல்பாகும். (.........)

**16.** மோதலைத் தீர்ப்பதற்கான சிறந்த முறை மோதலிலிருந்து புத்திசாதுரியமாக தவிர்த்துக் கொள்வதாகும். (.........)

**17.** நபரொருவரோ அல்லது குழுவினரோ சமூகத்திற்கு எதிராகச் செய்யும் தவறுகள் தொடர்பில் பிரயோகிக்கப்படும் சட்டம் குற்றவியற் சட்டமாகும். (.........)

**18.** 'தேசவழமை' சட்டத்திற்கமைய மனைவியின் அனுமதியின்றி கணவர் சொத்துக்களை விற்பனை செய்யவோ அடகு வைக்கவோ முடியும். (.........)

**19.** இலங்கையின் சமகால நீதித்துறைக் கட்டமைப்பிற்கமைய உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கெதிராக இங்கிலாந்தின் கோமறைக் கழகத்திற்கு (பிரிவி கவுன்சில்) மேன்முறையீடு செய்யலாம். (.........)

**20.** அரசியலமைப்பைப் பாதுகாக்கும் பணிகளும் அதிகாரங்களும் இலங்கை நீதிமன்றத்திற்குரியது. (.........)

- **21** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல் / சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**21.** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலமானது நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ........................................ கையொப்பத்துடன் சட்ட அந்தஸ்தைப் பெறும்.

**22.** நிறைவேற்றுக் குழுமுறை ஏற்படுத்தப்பட்டது ........................................ அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் மூலமாகும்.

**23.** பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பான கடமை ........................................ எனப்படும்.

**24.** மனித உரிமைகளின் வகைப்பாட்டிற்கிணங்க சட்டபூர்வமான தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை ........................................ உரிமையில் அடங்கும்.

**25.** பெண்களுக்கெதிரான அனைத்துவிதமான பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் பற்றிய உடன்படிக்கையானது ........................................ என அழைக்கப்படும்.

**26.** மண், நீர், வளி போன்றன சூழலில் உள்ள ........................................ கூறுகளில் அடங்கும்.

**27.** 'மொத்த தேசிய உற்பத்தி'யானது அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ........................................ அளவீடுகளில் அடங்கும்.

**28.** சர்வதேச உறவுகள் இரண்டு வகைப்படும். அவை இராஜதந்திர உறவுகளும் ........................................ ஆகும்.

**29.** யுத்தத்தை நோக்கமாகக் கொண்டு சோவியத் ரஷ்யாவின் தலைமையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அமைப்பு ........................................ என அழைக்கப்படும்.

**30.** சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளிடையே சுதந்திர வர்த்தக வலயமொன்றை உருவாக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ........................................ என அழைக்கப்படும்.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

● **31** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை எதிரிலுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** இரண்டு நாடுகளிடையே நிலப்பரப்பு தொடர்பான உரிமையைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக மக்கள் கருத்தை அறிவதற்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் நேரடி சனநாயக முறையாவது
(1) ஒப்பங் கோடல் (2) ஆரம்பித்தல்
(3) திருப்பியழைத்தல் (4) மக்கள் விருப்பு வாக்கெடுப்பு (……)

**32.** உற்பத்தியின் போது மனிதனால் பயன்படுத்தப்படும் உற்பத்தி துணைச்சாதனங்கள் அழைக்கப்படுவது,
(1) நிலப்பரப்பு என்றாகும். (2) ஊழியம் என்றாகும்.
(3) மூலதனம் என்றாகும். (4) முயற்சியாண்மை என்றாகும். (……)

**33.** தற்காலப் பல்கலாசாரச் சமூகங்களில் கலாசாரக் கலப்பு வேகமாகப் பரவுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகக் கருதப்படுவது
(1) உலகமயமாக்கத்தினதும் தொடர்பாடல் தொழினுட்பத்தினதும் முன்னேற்றம்
(2) சுற்றுலாத்துறையின் விருத்தி
(3) நாடுகளுக்கிடையிலான குடிப்பெயர்வு
(4) புதிய கலாசாரக் கூறுகளைத் தழுவுதல் ஒரு பாணியாக உருவெடுத்துள்ளமை (……)

**34.** இஸ்லாமிய சட்டங்களின் மூலமாக அமைவது
(1) இஜ்மா (2) கியாஸ் (3) அல் - குர்ஆன் (4) அல் - ஹதீஸ் (……)

**35.** இலங்கைக் குடியரசின் பிரதம சட்ட அதிகாரி
(1) பிரதம நீதியரசர் (2) சட்டமா அதிபர்
(3) சொலிசிட்டர் ஜெனரல் (4) நீதியமைச்சின் செயலாளர் (……)

**36.** 'தேச வழமை' சட்டத்திற்குட்பட்ட சொத்து பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வட மாகாணத்திற்குட்பட்ட தமிழ் மக்களுக்குரிய பிரதேசங்களில் அமைந்துள்ள சொத்துக்களுக்குரியதாகும்.
(2) தமிழ் மக்களுக்குரிய யாழ் தீபகற்பத்தில் மாத்திரம் அமைந்துள்ள சொத்துக்களுக்குரியதாகும்.
(3) வட மாகாணத்தில் வசிக்கின்ற அனைத்து பிரசைகளுக்கும் உரிய சொத்துக்களுக்குரியதாகும்.
(4) இலங்கையிலுள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் உரிய சொத்துக்கள் தொடர்பானதாகும். (……)

**37.** உயர்நீதிமன்றம் அதன் அதிகார வரம்புக்குட்பட்டு விசாரிக்கக்கூடிய வழக்குகளாவன
(1) வருவாய் பற்றிய வழக்குகள் (2) திருமணம் பற்றிய வழக்குகள்
(3) நட்டமடைந்த நிலைமை பற்றிய வழக்குகள் (4) தேசத்துதுரோகச் சூழ்ச்சி பற்றிய வழக்குகள் (……)

**38.** பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமையாவது,
(1) விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம்
(2) கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்
(3) இலவச கட்டாயக் கல்வியைப் பெறும் உரிமை
(4) தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமை (……)

**39.** இயற்கைக் காரணிகளால் பெரும்பாலும் ஏற்படும் சூழல் பிரச்சினையாவது
(1) மண் உவர்த்தன்மையடைதல் (2) காட்டுத்தீ ஏற்படல்
(3) அமில மழை பொழிதல் (4) முருகைக் கற்பாறைகள் அழிவுறல் (……)

**40.** பேண்தகு அபிவிருத்தி நோக்கில் வளங்களைப் பயன்படுத்தும்போது மிக முக்கியத்துவம் வாய்ந்தது
(1) 3R எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல்
(2) பயன்பாடும் பாதுகாப்பும்
(3) விளைதிறனை அதிகரித்தல்
(4) சட்டதிட்டங்களைக் கடுமையாக்குதல் (……)

* *

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය I, II
குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I, II
Citizenship Education & Governance I, II

## குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் II

※ **முதலாம்** வினா கட்டாயமானது.
※ **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) தற்கால உலகில் நேரடி சனநாயகம் நடைமுறையில் **இல்லாமைக்கான** காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) பல்கட்சி முறை நிலவும் நாடுகள் **இரண்டைப்** பெயரிடுக.

(iii) இலங்கையில் வாக்காளராவதற்கு நபரொருவர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக மனிதனால் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகள் **இரண்டைப்** பெயரிடுக.

(v) சமஷ்டி அரசின் முக்கிய பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) சுவிட்சர்லாந்தின் 'கன்டன்' எனப்படும், 'பிரதேச ஆட்சி அலகிற்கு' வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vii) முதலாளித்துவப் பொருளாதார முறையின் பண்புகள் **இரண்டை** எழுதுக.

(viii) மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனம் முன்வைக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) சூழலின் முக்கிய கூறுகள் **இரண்டையும்** பெயரிடுக.

(x) அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நவீன அளவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) அரசின் கூறுகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) தேசிய அரசுகளின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) சனநாயக ஆட்சிமுறையொன்றை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பிரசையொருவர் நடந்து கொள்ள வேண்டிய விதம் பற்றி **மூன்று** விடயங்களின் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) பண்டைக் காலந்தொட்டு இலங்கையின் அனைத்து இனக்குழுவினரும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் செயற்பட்டமை தொடர்பில் **இரண்டு** உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(ii) பல்கலாசாரச் (பன்மைப் பண்பாட்டு) சமூகமொன்றில் பல்வேறு இனக்குழுக்கள் ஒற்றுமையாக வாழ்வதனால் கிடைக்கும் நன்மைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பல்கலாசாரச் சமூகமொன்றின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரசையொருவர் வளர்த்துக்கொள்ள வேண்டிய குணவியல்புகள் **மூன்றை** விளக்குக. (05 புள்ளிகள்)

**4.** (i) மனித வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எந்தவொரு பொருளாதாரத்திலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மூன்றாக வகைப்படுத்தலாம். **அம்மூன்று** வகைகளையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) உலகமயமாக்கலானது இலங்கைப் பொருளாதாரத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றி **மூன்று** விடயங்களின் மூலம் விவரிக்குக. (05 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

5. (i) சட்டத்தில் காணப்படவேண்டிய பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ii) சட்டமா அதிபரின் அதிகாரங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(iii) நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்று** பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

6. (i) அபிவிருத்தியை அளவிடுவதன் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ii) அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய அளவைகள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)
(iii) பேண்தகு அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு பிரசையொருவர் என்ற வகையில் சூழல் தொடர்பில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் **மூன்றைச்** சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

7. (i) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ii) அரசினால் அடிப்படை உரிமைகள் தொடர்பில் சில கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு முடியும். அவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டியேற்படும் சந்தர்ப்பங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(iii) நபரொருவரால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டரீதியான கடமைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றின்** முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka